This article is published under the Creative Commons CC-BY-ND License (http://creativecommons.org/licenses/

# கண்டியும் நாயக்க மன்னர்களும்: பார்வையும் பதிவும்

**முனைவர் முருகு தயாநிதி**
*பணிப்பாளர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை*
*Correspondence: muruguthayanithy@gmail.com*
*Submitted: July, 06, 2025; Revised: Novembre, 10, 2025; Accepted: December, 09, 2025*

**Abstract**: Sri Lanka is a country with a long cultural heritage. Ravana is recorded as the first Tamil king in Sri Lankan history. Notes about his rule, with Koneswaram as his capital, are available through literary sources like the Konesar Kalvettu (Konesar Inscription). Following this era, the rule of the Yakshas (Yakkhas) and Nagas took place. The Nagas ruled with Nagadeepa as their capital. The Mahavamsa clearly records the visit of the Buddha to Sri Lanka during their reign (Mahavamsa, Chapter 1). Subsequently, from the time of Vijaya's arrival from Kalinga in the 5th century BCE, capitals such as Anuradhapura, Polonnaruwa, Jaffna, Kandy, and Colombo became centers of political power. In this sequence, Kandy became the capital. Kandy was ruled by three dynasties between 1469 and 1815 CE: the Sri Sanghabodhi dynasty, the Dinaraaja dynasty, and the Kandy Nayakkar dynasty. Except for the Nayakkar dynasty, the other two were Sinhalese rulers. However, cultural ties, such as marriages, were strong between the Nayakkar dynasty of Tamil Nadu and the Sinhalese monarchs. Due to this cultural confluence, a harmonious rule prevailed in Kandy. During this continuous reign, King Vira Narendra Sinha's marriage did not produce any children. Since Narendra Sinha had no heirs, his wife's brother, Sri Vijaya Rajasinghe of the Nayakkar dynasty, was crowned after him. He was followed by the Nayakkar kings Kirti Sri Rajasinghe, Rajadhi Rajasinghe, and Sri Vikrama Rajasinghe, who rooted the Nayakkar rule in Kandy. Among these kings, King Rajasinghe is praised in literature from the Tamil land of Batticaloa and in some other literary works. It is particularly noteworthy that the generic name of these kings is invoked and praised in the 'blessing songs' (Vaazhippadal) of the epic poetry sung during the rural deity worship ceremonies in the Batticaloa region.

Key Words: Sri Lanka, Kandy, Rural Deity Worship, Rajasinghe, Capital, Oral Songs (Oral Literature).

## 1.0 முன்னுரை

அரசியல் ஆட்சி இடம்பெறும்போது தலைநகரங்களும் மாற்றம்பெறுகின்றன. அந்த வகையில் கண்டியைத் தலைநகரமாகக் கொண்டு ஆரம்பத்தில் சிங்கள மன்னர்கள் ஆட்சி செய்திருக்கின்றனர். அவர்களுடைய ஆட்சியில் தமிழ், சிங்கள மக்களது உறவு மேம்பட்டிருந்தமையினை, மட்டக்களப்பு பூர்வசரித்திரம் மட்டக்களப்புத் தமிழகம் முதலிய நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. இவர்களுடைய ஆட்சி இடம்பெற்ற காலத்தில், மதுரை நாயக்க மன்னர்களுக்கும் கண்டி மன்னர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளன. அத்தொடர்பு காலப்போக்கில் திருமண உறவாக நீள்கின்றது. நாயக்கர் வம்சத்துப் பெண்களை சிங்கள மன்னர்கள் திருமணம் செய்துள்ளனர். அதனால் ஏற்பட்ட உறவின் காரணமாகக் கண்டியினை நாயக்க வம்சத்தினர் ஆட்சி செய்கின்றனர். அந்த ஆட்சி, கி.பி.1815ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையினைக் கைப்பற்றும் வரையும் இடம்பெற்றது. இவர்களுடைய காலத்தில் சைவமும் பௌத்தமும் மேலோங்கி இருந்ததோடு, தமிழ்மொழி சொல்வாக்குடைய அரசகரும மொழியாக மேலெழுந்திருக்கின்றன. பொதுவாக தமிழ்த் தெலுங்கர்களாகிய கண்டி மன்னர்கள், தங்களுடைய பெயர்களைச் சிங்கள கலாசாரத்திற்கு ஏற்றாப்போல் மாற்றிக்கொண்டு ஆட்சி செலுத்தி இருக்கின்றனர். இம்மன்னர்கள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் கால்பதித்தாலும், மட்டக்களப்புத் தமிழகத்தின்மீது அதிக பற்றுக்கொண்டவர்களாக இருந்துள்ளனர். அதாவது, பண்நெடுங்காலமாகச் சேரநாட்டுப் பண்பாடு இங்கு நிலவி இருக்கின்றது. குறிப்பாகக் கஜவாகு மன்னன் காலத்தில், சேரநாட்டிலிருந்து அரிஸ்பற்று, தும்பறை, அமுத்கோறளை முதலிய கிராமங்களில் மக்கள் குடியேற்றப்பட்டனர். இதற்கு முன்னர் மட்டக்களப்புத் தமிழகத்தில் நதிக்கரையோரமாக இருந்த மக்களும் சேரநாட்டினராக இருந்துள்ளனர். இவ்வாறான ஒரு தொடர்பினால் கண்டி மன்னர்களுக்கும் மட்டக்களப்புக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது என்பதனை, ஒல்லாந்தருக்கும் இராசசிங்கனுக்கும் இடையே இடம்பெற்ற

ஒப்பந்தத்தில்கூட, "மட்டக்களப்பை நீக்கி மற்றக்கரை நாட்டைப்பெற்றுக்கொள்" என்று வேட் என்பவனை நோக்கிக் கூறியமையும் அவதானிக்கத்தக்கது. இவ்வாறான நிலையில் கண்டி மன்னர்கள், மட்டக்களப்புத் தமிழகத்திலும் பிற பிரதேச இலங்கியங்கள் சிலவற்றிலும் துதிக்கப்பட்டு வணங்கப்படுகின்றனர். இத்தகைய இராட்சியம், துரோகத்தினாலும் காட்டிக்கொடுப்பினாலும் வீழ்த்தப்பட்டு, ஆங்கிலேயரின் ஆட்சிக்குக்கீழ் கொண்டுவரப்படுகின்றது.

## 2.0 ஆய்வுப் பகுதி

### 2.1 இலங்கை

லெமூரியாக் கண்டத்தில் ஏற்பட்ட கடற்கோளினால் பலநகரங்கள் மூழ்கிப்போக, எஞ்சிய பகுதியாக நின்றது இலங்கை என்பர். இந்த நாட்டினைக் குபேரனும் அதனைத் தொடர்ந்து இராவணனும் ஆட்சிசெய்ததாக இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாச இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். இராவணனுடைய காலத்தில் திருகோணமலை அவனது தளமாக இருந்திருக்கின்றது. அவனது ஆட்சியின் தொடர்ச்சியாக இலங்கையில் பல ஆட்சி மாற்றங்கள் இடம்பெறுகின்றன. இந்த ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்ற காலங்களில் தலைநகரங்கள் பலவும் மாற்றம் காணுகின்றன. அந்த வகையில் அனுராதபுரம், சீகிரியா, பொலனறுவை, தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகல், கம்பளை, கோட்டை, சீதாவாக்கை, கண்டி, யாழ்ப்பாணம் என்பன தலைநகரங்களாக இருந்திருக்கின்றன. தற்போது கொழும்பில் உள்ள ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக் கோட்டை இலங்கையின் தலைநகரமாக உள்ளது. இன்று இலங்கையில் இருபத்தைந்து மாவட்டங்களும் ஒன்பது மாகாணங்களும் உள்ளன.

### 2.2 கண்டி

மட்டக்களப்பு பூர்வசரித்திரம், மட்டக்களப்பு மான்மிகம் போன்ற ஆதாரங்களின் அடிப்படையில் நோக்கின், இராவணன் காலம் தொடக்கம் இலங்கையில் ஆட்சி நீட்சி பெற்று வந்திருக்கின்றது. பின்னர் விஜயன் வரவு, சிறிகுல சேனன், கூத்தீகன் என்று தொடர்ந்த ஆட்சி ஆடகசௌந்தரி, கலிங்க மாகோன் வரையும் நீட்சி பெறுகின்றது. இவ்வாறான நிலையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சி இடம்பெறுகின்றது. இக்காலத்தில் கண்டி இராச்சியம் நிலைத்த தன்மையுடன் கோலோச்சியது. காலத்திலும் கண்டியில் ஆட்சி நிலைத்திருந்திருக்கின்றது. கலிங்க மாகோன் இலங்கையைக் கைப்பற்றி (கி.பி.1215 – 1255) காலத்தில் மட்டக்களப்புத் தமிழகம் நான்கு பாகமாகப் பிரிக்கப்படுகினறது.

1. மண்முனைப் பகுதி – கலிங்க குலம்
2. மண்முனை வடபகுதி – படையாட்சி குலம்
3. மட்டக்களப்பு – வங்கர் குலம்
4. உன்னாசகிரி – சிங்கர் குலம் (சண்முகம்,சி.,2000:18)

இவ்வாறான பின்னணியில், சிங்கன் குலத்தவர், வங்கர் குலத்தவர்களையும் இணைத்துக்கொண்டு, இலங்கை முழுதுக்கும் விஜயதுவீபத்தை மத்திய தலமாக்கி ஆட்சி இடம்பெறுகின்றது. குறிப்பாக மண்முனைக்கு வடக்குப் பிரதேசத்தை கோறளை நகராக்கி வங்கர், சிங்கர், படையாட்சி மூன்று குலத்தவருடனும் சிங்கனும் கலந்து, அக்குலத்தினருக்கு குகன்குலம் என திட்டம் செய்து, இலங்கை முழுவதையும் ஆண்டனர். (நடராசா, எப்.எச்.சி.,1998) இத்தகைய விஜயதுவீபமே, பின்னர் கண்டி என்ற பெயரில் சிங்கன் குலத்தவரால் அடையாளமாகின்றது. இவ்வாறாக இவர்கள் 38 வருடங்கள் மட்டக்களப்பினை ஆட்சி செய்துவரும் காலத்தில், தொடர்ந்து ஏற்பட்ட கலகத்தால் தோப்பாவை (பொலநறுவை) மீண்டும் தலைநகரமாகின்றது. அதாவது, தோப்பாவையில் திக்கதிகாரம் செய்த கலிங்க குலத்து மாருதசேனன், இலங்கையில் பலபகுதிகளிலுமுள்ள திக்கதிபர்களின் துணையுடன், மத்திய நகரத்தரசனை (கண்டி) எதிர்த்து வெற்றிபெற்று, அவனுடைய புத்திரனான எதிர்மன்னசிங்கனுக்கு தோப்பாவை, மட்டக்களப்பு, உன்னாசகிரி, மண்முனை, கோறளை, போர்முனை ஆகிய பகுதிகளைக் கையளித்து, கி.பி.1538ஆம் வருடம் அவனுக்குப் பட்டங்கட்டினான். (கமலநாதன்,சா.இ.,2005)

இலங்கையின் மத்திய மலைப்பகுதியில் இருந்தது "கோட்டை" அரசு. இந்த அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, அதிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனி அரசாக உருவானதுதான் கண்டி. கி.பி.1469 இல் சேனா சம்மத விக்கிரபாகு என்ற சிங்கள மன்னர்தான், இந்தக் கண்டி அரசை உருவாக்கினார். இக்கண்டி அரசை கி.பி.1739 முதல் கி.பி.1815 வரை ஆட்சி செய்தவர்கள் நாயக்க மன்னர்கள். கண்டி நாயக்க அரசின் கடைசி மன்னர், ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன். கி.பி. 1467 – 1815 காலம் விரை கண்டி மன்னர்களின் ஆட்சியில் இருந்த மத்திய

மலைநாடானது மலைகளாலும், ஆறுகளாலும், காடுகளாலும், நீர் நிலைகளாலும் சூழப்பட்டிருந்த கண்டி இராச்சியம், ஆரம்பகாலத்தில் ஐந்து பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது.

1. சிதுருவான - உடுநுவர, உட பலாத்த
2. பலவிட்ட - ஹரிஸ்பத்துவ
3. மாத்தளை - மாத்தளை
4. தும்பறை - தும்பறை
5. சமஹதுன்ரட்ட - வலப்பன, ஹெவாஹெட்ட

(கிருஷ்ணராசா,செ.,2012:68)

ஆரம்ப காலத்தில் கண்டியினை ஆண்ட மன்னர்கள் சிங்கள மன்னர்களாகவே இருந்துள்ளனர். அவர்கள் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுத்தது போன்று, சைவத்திற்கும் முன்னுரிமை கொடுத்து வந்துள்ளனர். கண்டியில் நாயக்க வம்சம் ஆட்சிப்பொறுப்பினைக் கைப்பற்றும் முன்னம், கண்டியினை ஆண்ட மன்னர்கள் தமிழ்நாட்டுடனே திருமண உறவினை பேணிவந்தனர். அந்த திருமணப் பண்பாட்டு உறவினால் கண்டியில் நாயக்க மன்னர்களுடைய வருகையும் உறவும் மேன்மையடைந்தது. இவ்வாறான ஒரு உறவுப் பின்னணி இருந்ததன் காரணமாகக் கண்டியினை நாயக்கர் வம்சத்தினர் ஆட்சி செய்ய அது வழிசமைத்தது.

### 2.3 கண்டியினை ஆட்சி செய்த வம்சத்தினர்

#### 2.3.1 சிறிசங்கபோதி வம்சம்

| | | |
|---|---|---|
| 1. | சேனா சம்மத விக்கிரமபாகு | (1469 - 1511) |
| 2. | ஜயவீர | (1511 - 1552) |
| 3. | கரலியத்த பண்டார சிங்கன் | (1552 - 1582) |
| 4. | முதலாம் இராஜசிங்கன் | (1582 - 1592) |

#### 2.3.2. தினராஜ வம்சம்

| | | |
|---|---|---|
| 1. | முதலாம் விமலதர்மசூரிய | (1592 - 1604) |
| 2. | செனரத் | (1604 - 1635) |
| 3. | இரண்டாம் இராஜசிங்கன் | (1635 - 1687) |
| 4. | இரண்டாம் விமலதர்மசூரிய | (1687 - 1707) |
| 5. | வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் | (1707 - 1739) |

#### 2.3.3. கண்டி நாயக்கர் வம்சம்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ விஜய ராஜசிங்கன் | (1739 - 1747) |
| 2. | கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் | (1747 - 1782) |
| 3. | இராஜாதி ராஜசிங்கன் | (1782 - 1798) |
| 4. | ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் | (1798 - 1815) |

**(இணையம் - Kingdom of Kandy)**

### 2.4 நாயக்கர் வம்சத்தினர்

நாயக்கர் மன்னர்களுடைய ஆட்சி தமிழ்நாட்டில் குறிப்பிட்ட மாற்றத்தினை ஏற்படுத்தியது. அத்தகை ஒரு மாற்றம், இலங்கையினையும் பாதிக்கவே செய்தது. நாயக்கர்களைத் தலைவன், வீரன், தந்தை, அனைத்திலும் முதல்வன், உயர்ந்தவன் என்று அழைப்பது வழக்கம். இவர்கள் ஆந்திரா, கருநாடகா, தமிழ்நாடு, கேரளம் போன்ற பகுதிகளில் வாழ்கின்றனர். “ரிக் வேதத்தின் அய்த்ரேய பிராமணம்” இவர்களை, கங்கைச் சமவெளியில், யமுனை நதிக்கரையில் வாழ்ந்த மேய்ச்சல் நில ஓர் இன பழங்குடிமக்கள் என அடையாளப்படுத்துகின்றது. இம்மக்கள் காப்பு, கொல்லா, இகம்மா எனப்படும் இனத்தவர்களின் மரபுகளாக அறியப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் விஜயநகரப்பேரரசு உருவானபோது, அவர்கள் கைப்பற்றிய பகுதிகளுக்குத் தளபதிகளை அரசபிரதிநிதிகளாக நியமித்தார்கள். ஆட்சியின் தொடக்ககாலத்தில் விஜயநகரப்பேரரசு பலத்துடன் காணப்பட்டது. இந்த அரசு பலமிழந்தபோது, இப்பிரதிநிதிகள் தங்களை விடுவித்து, அப்பேரரசிலிருந்து சுயாட்சி பெற்று செஞ்சி, காளஹஸ்தி, தஞ்சாவூர், மதுரை ஆகிய நகரங்களை தலைநகராக்கொண்டு, தஞ்சையில் கி.பி. 1532இல் நாயக்க மன்னர்களின் ஆட்சியினைத் தொடங்கினர். தஞ்சை நாயக்கர்கள் தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு, சோழ மண்டலத்தை ஆண்டு வந்தனர். இவ்வம்சத்தின் முதல் மன்னன் சேவப்பநாயக்கர் என்பவராவர். சேவப்ப நாயக்கர், விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயருக்கு நெருங்கிய அதிகாரியும் வடாற்காட்டில் அமர நாயக்கராகவும் இருந்த திம்மப்ப நாயக்கரின் மகனுமாவான். தொடர்ந்து மதுரை நாயக்க வம்சத்தின் ஆட்சி இடம்பெறுகின்றது. இந்த ஆட்சி மாற்றம், பண்பாட்டுத்தளத்தில் பெருமாற்றத்தினை ஏற்படுத்தியது. மதுரை நாயக்கர்கள், மதுரையையும் அதைச் சார்ந்த பகுதிகளையும் 1529 – 1736 ஆண்டுவரையும் ஆட்சி செய்தனர்.

#### 2.4.1 இலங்கையில் நாயக்கர் ஆட்சி

சிங்கள மன்னர்கள், கண்டியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்து வந்தனர். இந்த மன்னர்கள் தங்களுடைய காலங்களில் பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்தபோதும், சைவத்தினையும் பேணிக்காத்து வந்தனர். இவ்வாறான நிலையில் வீரபராக்கிரம

நரேந்திரசிங்கன் (1707 - 1739) ஆட்சியினைத் தொடர்ந்து ஏற்பட்ட திருப்புமுனை, நாயக்க மன்னர்களின் ஆட்சி கண்டியில் வேரூன்ற வித்திடுகின்றது. கண்டியில் நாயக்கர் மன்னர்களுடைய ஆட்சி வரும்வரை, கண்டி மன்னர்கள் தமிழ்நாட்டு நாயக்கர் மன்னர்களுடன் தொடர்பைப் பேணியுள்ளனர். கண்டி நாயக்கர் என்போர், இலங்கையின் கண்டி அரசை ஆண்ட, தென்னிந்தியத் தெலுங்கு நாயக்கர் அரச மரபைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும். இவர்கள் கண்டியைத் தலை நகராகக்கொண்டு, 1707 ஆம் ஆண்டு தொடக்கம், 1815 ஆம் ஆண்டு வரைக்கும் ஆட்சிசெய்து வந்தனர். நாயக்க மன்னர்களுடைய அரசமரபே இலங்கையின் கடைசி அரசமரபாகும். இவர்கள் தொடக்கத்தில் விஜயநகரப் பேரரசின் கீழ், பாளையக்காரராக இருந்து, பின்னர் சுதந்திர அரசமரபை உருவாக்கிய மதுரை நாயக்கமரபைச் சேர்ந்தவர்கள். கண்டிய அரசமரபினருடன் செய்துகொண்ட மணத்தொடர்புகளின் வழியாகவே இவர்களுக்குக் கண்டியரசின் அரசுரிமை கிடைத்ததோடு, இம்மரபைச் சேர்ந்த நான்கு அரசர்கள் கண்டியை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் இந்துக்களாக இருப்பினும், இலங்கையில் பௌத்தமதத்தின் மறுமலர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியுள்ளனர். இவ்வாறாக நாயக்க மன்னர்களின் ஆட்சி, தமிழ்நாட்டில் நிலவிய காலத்தில், அதன் பண்பாட்டுத் தொடர்பு கண்டியுடனும் இருந்திருக்கின்றது என்பதனைக் கண்டுகொள்ளமுடிகின்றது.

### 2.4.2 வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்

வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் (கி.பி.1690 - 1739) கண்டி இராச்சியத்தின் கடைசி சிங்கள அரசன். தந்தை இரண்டாம் விமலதர்மசூரியனின் இறப்பிற்குப் பின்னர், தனது 17வது அகவையில் ஆட்சிக்கு வந்து, 32 ஆண்டுகள் கண்டி இராச்சியத்தின் மன்னனாக இருந்தான். வீரநரேந்திரசிங்கன் தனது தந்தையைப் போன்றே சமயப்பற்று மிக்கவராக இருந்தான். இலங்கையின் டச்சு ஆட்சியாளர்களுடன் அமைதியைப் பேணி வந்த இவன், இலக்கியம், மற்றும் சமயத்தில் அதிக ஆர்வம் காட்டினான். தென்னிந்தியாவின் மதுரை நாயக்க குடும்பத்தில் இருந்து இரு பெண்களை மணந்து கொண்டபோதும், இவர்களுக்குப் பிள்ளைகள் எவரும் பிறக்கவில்லை என்பதால், மாத்தளையைச் சேர்ந்த, பிரபுக்குடும்பம் ஒன்றில் பிறந்த, இன்னும் ஒரு பெண்ணை மணந்து கொண்டான். அவளுக்குப் பிறந்த குழந்தை, சிறு வயதிலேயே இறந்து விட்டது. நரேந்திர சிங்கனுக்குப் பிள்ளைகள் எவரும் இல்லாததால் அவருக்குப் பின்னர், மனைவியின் சகோதரன் நாயக்க வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ விஜயராஜசிங்கனை (கி.பி.1739 - 1747) முடிசூடச் செய்தான்.

வீரநரேந்திரசிங்கன் காலத்திலும் அதற்கு முன்னரும் சிங்கள மன்னர்கள், சைவமும் தமிழும் வளர்வதற்கு சிறப்பாகப் பங்காற்றினர். ஒரு நாட்டின் ஆட்சி இன, மத, சாதி, வர்க்க வேறுபாடின்றி இடம்பெற வேண்டும் என்பதற்கு வீரநரேந்திரசிங்கன் சிறந்த உதாரணபுருஷனாக விளங்கினான் என்பதனை மட்டக்களப்பில் பயில் நிலையில் உள்ள வசந்தன் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

“சீராரும் தென்னிலங்கை யாளவந்த வேள் நரேந்திர
சிங்கசாமிமேல் வசந்தன் சிந்து சொல்லவே
காராரும் சோனை மழைக்கால் விழுந்தபோல் வழிந்த
கன்னமதத் தண்ணல் பதம் காப்பதாமே”

“கர்பழகும் தாதகியின் பூப்பழகு மாலைமார்பன்
கண்டிவாழ் நரேந்திரசிங்க காவலன் மீது
நாப்பழகுஞ் செந்தமிழச் செவ்வாய்ப் பிழை வராமலென்றும்
நந்து திருக்கோயில் வாழும் கந்தர் துணையே” (தயாநிதி,முருகு.,2023:86)

இவ்வாறாகப் பதினைந்து பாடல்கள் அவன் ஆட்சிப் பெருமை பற்றிப் பேசுகின்றன. அவ்வாறெனின் சிங்கள மன்னர்களுக்கும் மட்டக்களப்புத் தமிழகத்திற்கும் இடையே இருந்த தொடர்பு அந்நியொன்னியமானது என்பது தெரிகின்றது. இத்தகைய ஒரு மாற்றம் கண்டியில் நாயக்கர் மன்னர்கள் தங்கள் ஆட்சியினை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவியாக இருந்துள்ளது.

#### 2.4.2.1 ஸ்ரீ விஜயராஜசிங்கன்

கி.பி.1736ஆம் ஆண்டு மதுரை நாயக்கர் ஆட்சி வீழ்ச்சியடைகின்றது. இவ்வாறான ஒரு நிலையில், கி.பி.1747 இல் நரேந்திரசிங்கனும் இறந்துவிடுகின்றான். இறக்கும் போது இவனுக்கு பிள்ளைகள் இல்லை. இவ்வாறான நிலையில் கண்டியின் மரபுரிமை வழக்கின்படி, தனது மூத்த அரசியின் தம்பியான ஸ்ரீ விஜயராஜசிங்கனைத் தனது வாரிசாக அரசன் தேர்ந்தெடுத்திருந்தான். இவன், தென்னிந்திய மதுரை நாயக்கர் மரபினைச் சேர்ந்த இவன், கண்டி நாயக்கர்

மரபை உருவாக்கிப் பின்னர் பண்பாடுள்ள அரசனாக விளங்கியவன் என்பர். இந்து சமயத்தைச் சேர்ந்தவனாக இருந்தபோதிலும், கண்டியின் அரச மதமாக விளங்கிய புத்த சமயத்தின் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டினான். ஸ்ரீ விஜயராஜசிங்கன், நாயக்கவம்ச இளவரசியை மணந்து, அவளைத் தனது பட்டத்து இராணியாக்கினான். இவன் தனது தமக்கையார் மணமுடித்தகாலம் முதலே, கண்டி அரண்மனையிலேயே வளர்ந்தவன். இவன் அக்காலத்தில் வழக்கில் இருந்த மருமக்கதாயம் என்னும் முறையை ஒட்டியே மன்னனாக முடிசூடினான். மருமக்கதாய முறையே இன்றுவரையும் மட்டக்களப்புத் தமிழக சமுகநடைமுறையாக இருந்து வருகின்றது. இம்முறை இன்றும் கேரளத்தில் பின்பற்றப்படுகின்றது. இதன் பின்னர் தொடர்ந்து வந்த அரசர்களும் இம்மரபில் இருந்தே வந்தனர். இந்த நிகழ்வின் பின்னர் கண்டியினை நாயக்கவம்சத்தினரே ஆண்டு வந்தனர்.

இலங்கையினை ஒல்லாந்தர்கள் ஆட்சி செய்த காலத்தில், அவர்களை எதிர்த்த ஸ்ரீ விக்கிரமராசசிங்கன், அரச அதிகாரத்தினை மட்டக்களப்பில் நிலைநாட்டினான். ஒல்லாந்தர்களில் ஒருவனான பஸ்கோ முதலி செய்த கள்ளக் கையொப்பம் இடும் பொருத்தமில்லாத ஒழுக்கத்தை சுட்டிக்காட்டி, அவனை சிறையில் அடைக்கும்படி ஒல்லாந்தருக்குக் கட்டளை பிறப்பிக்கும் அளவுக்கு அவனுடைய அதிகாரம் குவியமாகியிருந்தது. அதாவது, பஸ்கோ முதலி கி.பி.1728 ஆம் ஆண்டு ஒல்லாந்த நாட்டிலிருந்து மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டிருக்கின்றான். இவன் கிறிஸ்தவ மதத்திற்கு மக்களை மதமாற்றுதல், இலஞ்ச ஊழல் என்பவற்றிற்கு கள்ளக் கையொப்பமிடுதல், ஏமாற்றுதல் போன்ற அபாயகரமான வேலைகளைச் செய்துகொண்டிருந்தான். இந்த விடயம் சம்பந்தமாக விஜயராசசிங்கனுக்கு அறிவிக்கப்பட்டது. நிலமையினை விசாரித்து ஒல்லாந்தருக்குப் பின்வருமாறு கூறுகின்றான். “பஸ்கோ முதலியோ அவனுடைய சந்ததியினரோ அரச பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாது, இனி மட்டக்களப்பு முக்குலத்தோரைத் தவிர, அந்நியர்கள் இராச அதிகாரிகளாக நியமிக்கப்படக்கூடாது என்று அரச பட்டயத்தில் எழுதுவித்தான்’’. மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க பஸ்கோ முதலி ஊர்காவற்துறை கோட்டையில் சிறைவைக்கப்பட்டான். இதன் பின்னனியில்தான் அறுமக்குட்டிப்போடியும் கந்தப்போடியும் ‘‘போடி’’ நியமனம் பெற்றனர். (சிவசண்முகம்,பு.,2000)

**2.4.2.2 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்**

கண்டி இராச்சியத்தின் இரண்டாவது நாயக்க வம்ச மன்னன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன். (கி.பி. 1734 - 1782) இவன் மதுரை நாயக்க இளவரசன் என்பதோடு, ஸ்ரீ விஜய இராஜசிங்கனின் மனைவியின் சகோதரனும் ஆவான். ஸ்ரீ விஜய இராஜசிங்கன் 1747 ஆம் ஆண்டில் தேகவிமோர்சனம் அடைந்த பின்னர், நாயக்க வம்ச மரபின்படி, அவனது மனைவியின் சகோதரன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (கி.பி.1751) பதினாறு வயதில் கண்டியின் மன்னனாக முடிசூடுகின்றான். அதுவரையிலும் அவனது தந்தை, நரனப்பா நாயக்கர் ஆட்சியை கவனித்துவந்தார். நாயக்கர்களது செயல்களை விரும்பாத கண்டியின் பிரதானிகள் அவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தது மட்டுமன்றி, மன்னருக்கு எதிராகப் பல பிரச்சினைகளையும் ஏற்படுத்திக்கொண்டு, கி.பி 1760ம் ஆண்டு காலத்தில் ஒல்லாந்தருக்கு எதிராக மக்களை தூண்டியும்விட்டான். கி.பி.1765 சனவரியில் ஒல்லாந்தர் கண்டியை ஆக்கிரமிப்புச் செய்தபோது தப்பிச்சென்ற இவன், பின்னர் கி.பி.1766ம் ஆண்டு ஒல்லாந்தருடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்கிறான். இவன் தலதா பெரகராவுடன் தேவாலயப் பெரகராவையும் இணைத்து எசல பெரகராவை நடத்தினான். பழைய இராசதானிகளில் சிதைவுற்றிருந்த விகாரைகளை புனர்நிர்மானம் செய்து, வெலிவிட்ட சரணங்கரதேரர் என்ற பௌத்த பிக்குவின் சமயப் பணிகளுக்கு ஆதரவு வழங்கி, விகாரைகளை கொண்டு நடத்த, அதற்கு நிலபுலன்களைக்கொடுத்து, பௌத்த மதத்துக்கும், சிங்கள மக்களுக்கும் ஏராளமான நன்மைகளைச் செய்தான். எனினும் அவன், தனிப்பட்ட முறையில் திருநீறு அணியும் வழக்கத்தைக் கைவிடவில்லை. இதனால் அவரைக் கொன்று ஆட்சியைக்கைப்பற்ற அவரது ஆட்சியிலேயே இருந்த சிங்களத் தளபதிகளும், புத்த பிக்குகளும் முடிவு செய்து, அதற்கான முயற்சியில் இறங்கினர். தற்செயலாக மன்னர் காப்பாற்றப்பட்டார். சதிச்செயலுக்குக் காரணமான சிங்கள அதிகாரிகளான சமணக்கொடி, மொலதந்தரட்டராலே, கடுவெனராலே, மதினப்பொல திசாவ ஆகியோர் சிரச்சேதம் செய்யப்பட்டனர். (சிவசுப்பிரமணியம்,வ.,2004)

**2.4.2.2.1 தலைமை நிலைமையாக நியமித்தல்**

மட்டக்களப்பு பூர்வசரித்திர வரலாற்றுப்படி, கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன் காலத்தில் தலைமை நிலைமைகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். தலைமை நிலைமை என்பது ஆளும் அதிகாரம் உடைய தன்மையில் நிற்கின்றது. மட்டக்களப்புத் தமிழக குகன்குலத்தோர் கூறிய கருத்துக்களைச் செவிமடுத்த ஒல்லாந்தர், அறுமக்குட்டிப்போடியை அழைத்து, அவருடைய சம்மதம் பெற்று, ஆக்கொத்து எழுதுகின்றனர். இவர்களது நியமனம், 1766ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 6 திகதி கொழும்புக் கோட்டையில் வைத்து கையொப்பம் இடப்பட்டிருக்கின்றது. கலிங்க குலத்துக்குரியவனான அறுமக்குட்டிப்போடி அதனைப்பெற்று தனது ஆட்சியைச் சிறப்பாக நடத்தி இருக்கின்றான். கீர்த்தி ஶ்ரீ இராசசிங்கன் கண்டிக்கு மன்னனாக இருந்த காலமென்பதால், கண்டிக்குச் சென்று அவனுடைய ஆசிர்வாதத்தையும் பெற்றிருக்கின்றனர். இதில் மட்டக்களப்புப் பிரதேசத்தினை இரண்டாக வகுத்து தென்பாகத்திற்கு கந்தப்போடியையும் வடபாகத்திற்கு அறுமக்குட்டிப்போடியையும் நியமித்துள்ளனர். இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்பதனைப் அறியமுடிகின்றது. (கந்தையா,வி.சி.,1964:103-104) இங்கு ஒரு விடயம் தெளிவாகின்றது, அதாவது, கண்டி மன்னனும் மட்டக்களப்புக்குத் தலைமை நிலைமை வகுக்கவேண்டிய நிலையில் இருந்தான். அந்த நியமனம் கண்டியினுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது போலும். அத்துடன் கண்டி மன்னன் போர்த்துக்கேயரைத் தோற்கடிக்க ஒல்லாந்தருடன் செய்து கொண்ட ஒப்பந்தமும் இதனை விரைவுபடுத்தி இருக்கலாம்.

**2.4.2.3 ஶ்ரீ இராஜாதி இராஜசிங்கன்**

ஶ்ரீ இராசாதி இராசசிங்கன் (கி.பி.1782 – 1798) கண்டி நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ஆவான். இவன் 1782 ஆம் ஆண்டில், இவனது உடன்பிறப்பான, கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கனின் இறப்புக்குப் பின்னர், கண்டி இராச்சியத்தின் மன்னனாகின்றான். ஶ்ரீ இராசாதி இராசசிங்கன் முடிசூட்டு விழா கண்டியில் 1782ஆம் ஆண்டு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு நிருவாகத்திற்கு நியமிக்கப்பட்ட அறுமக்குட்டிப்போடியும் கந்தப்போடியும் அவர்களுடன் பொதுமக்கள் உட்படப் பலரும் சென்றிருக்கின்றனர். அறுமக்குட்டிப்போடி வைர மாலையினையும் கந்தப்போடி வராகன் மாலையினையும் கொண்டு அவனுக்கு அணிவித்தனர். (சிவசண்முகம்,சி.,2000)

**2.4.2.4 ஶ்ரீ விக்கிரமராசசிங்கன்**

கண்டியின் கடைசி மன்னனான ஶ்ரீ விக்கிரமராஜசிங்கனின் பூர்வீகம் தஞ்சையில் உள்ள புதுக்கோட்டை பூலாம்பட்டியாகும். இவன் நாயக்கர் வம்சத்தினைச் சேர்ந்த தமிழ்பேசும் தெலுங்கர் இனத்தைச் சார்ந்தவன். தந்தை வேங்கடப்பெருமாள். இவர், விஜயநகரப் பேரரசின் மூன்றாம் வேங்கட மன்னன் பரம்பரையில் வந்தவர். தாயார் சுப்பம்மாள். இவர்களுக்கு இரு பெண்பிள்ளைகளும் ஒரு அண்பிள்ளையும் உண்டு. இவன்தான் ஶ்ரீ விக்கிரமசிங்கன். பெற்றோர் இவனுக்குச் சூட்டிய பெயர் கண்ணுச்சாமி. வேங்கடப் பெருமாள் இராமேஸ்வரத்துக்கு குடிபெயர்ந்து வந்து, அங்குள்ள பெரிய கோவிலில் வேலை செய்து வந்த சிறிது காலத்தில் அவர் இறந்துவிடுகின்றார். இவ்வாறான நிலையில் இராமேஸ்வரத்தில் இருந்த தங்கை சுப்பம்மாளையும் கண்ணுசாமியையும் பட்டத்துராணி கண்டிக்கு வரவழைத்தாள். கண்டியில் சிறுவர்களுக்கே உரிய துடிதுடிப்புடன் காணப்பட்ட கண்ணுசாமியை, மல்வத்த தேரரிடம் அனுப்பி, சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் ஏனைய வித்தைகளையும் கற்கச்செய்தாள். ஏழு வயதில் கண்டிக்கு வந்த கண்ணுசாமி மகாராணிக்கு தத்துப்பிள்ளையாகி, 17 வயதில் (1798) கண்டியின் அரசுரிமையை ஏற்று, நீதி, நியாயம், தர்மம், அறச்சிந்தனைகளுடன் ஆட்சி நடத்தத்தொடங்கினான். இந்த நிலையினைக் குழப்புவதற்காக மன்னனுக்கு உதவியாக இருந்த அதிகாரிகள் திரைமறைவில் திட்டமிட்ட அரசியல் சதியில் ஈடுபட்டனர். இந்தச் சதிவலைகளிலிருந்து மன்னன் தன்னையும் நாட்டையும் காப்பாற்றிக்கொள்ள மிகுந்த எச்சரிக்கைளுடன் நடந்துகொள்ள முனைந்தான். தனது எச்சரிக்கை உணர்வை மிகைப்படுத்தி வெளிப்படுத்தியதால், மன்னனுக்கு எதிராக அதிகாரிகள் திசைதிரும்பினார்கள். மன்னனின் முதல் மந்திரியாகக் கடமையாற்றிய பிலிமத்தலாவ, எகலபொல ஆகியோரின் நடவடிக்கைகள் அவனைக் கொடுமைக்காரனாக உருவெடுக்கச் செய்தது.

**2.4.2.4.1 பிலிமத்தலாவ**

பிலிமத்தலாவ சிங்களத் தளபதிகளைத் திரட்டி, கண்டி அரசரை வீழ்த்த நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். மூன்று முறை படையெடுப்பு முயற்சிகளைச் செய்தார். தனது

மெய்ப்பாதுகாவலரைக் கொண்டே அரசரைக் கொல்லும் முயற்சியிலும் இறங்கித் அனைத்து முயற்சியிலும் தோற்றுப்போனார். இவ்வாறான நிலையில் பிலிமத்தலாவையின் சதிச்செயல்களை இனியும் மன்னிக்க இயலாது என முடிவு செய்த மன்னன், 1811 இல் பிலிமத்தலாவக்கு மரண தண்டனை விதித்தான். பிலிமத்தலாவ சிரச்சேதம் செய்யப்பட்டமையானது அரசியல் நிலையில் பெரும் அதிர்சியினை ஏற்படுத்தியது. அதன் தொடர்ச்சியாகப் பல்வேறு அரசியல் குழப்பங்கள் இடம்பெற்றமையினை வரலாறு தெளிவுபடுத்துகின்றது.

**2.4.2.4.2 எகலபொல**

ஸ்ரீ விஜயராசசிங்கன் கண்டியில் சிம்மாசனத்துக்கு வருகை தந்த பொழுது, அதிகாரி எகலபொல என்பவனே மிகவும் முக்கியமான அதிகாரங்கள் அனைத்தையும் வைத்திருந்த பிரவுவாக விளங்கினான். முன்னைய மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் உடபலட்டவின் திசாவையாகவும் மகாதேவாலயத்தின் பஸ்க நிலமேயாகவும் நியமனம் செய்யப்பட்டிருந்த நிலையில், அவன், கண்டி மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குடைய பிரவுவாக விளங்கினான். கண்டிநாயக்க வம்சத்தினுடைய கண்டி அரசன் மீதான அரசியல் பிரவேசத்திற்கும், அதிகாரிமீதான அதீத நம்பிக்கை, விசுவாசம், பொறுப்பு ஆகியவற்றை நாயக்க ஆட்சியாளர் வைத்திருப்பதற்கும், பின்னணியாக விளங்கினான். இளவரசிகளை மற்றும் பட்டத்து இராணிகளைத் தெரிவுசெய்து கொடுப்பது முதல், அரசவையில் இடம்பெறுகின்ற திருமணங்கள் யாவற்றுக்கும் பொறுப்பாக இருந்தான். அத்தோடு மட்டக்களப்பு, பாணம, நுகரகலாவிய, தம்பலகமுவ முதலிய கோறளைகளுக்கு ஆள்பதிப் பதவியையும் ஸ்ரீ விஜயராசசிங்கன் வழங்கி இருந்தான். எகலபொலவினால் கண்டி அரசனுக்கு அதிக வருமானம் கிடைத்தது. இதற்காக கண்டிய அரசன் அதிக நிலபுலங்களை அவனுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் அதிகாரியாக நரேந்திரசிங்கன் காலத்தில் நியமனம் செய்யப்பட்ட பிலிமத்தலாவேக்கும் எகலபொலவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இவ்வாறான நிலையில், இரண்டாம் அதிகாரிப் பொறுப்பை சமணக்கொட்டிக்கு விட்டுக்கொடுக்க வேண்டி இருந்தது. இவன் எகலபொலவின் பரமவிரோத்யாவான். இத்தகைய நியமனம், கண்டியரசனுக்கு மறைமுகமான சிக்கலை ஏற்படுத்தத்தொடங்கியது. கண்டி நாயக்க ஆட்சியினை அடியோடு ஒழிப்பதற்கு இவர்கள் திட்டம் தீட்டி, அதனை நடைமுறைப்படுத்தினர். கண்டி அரசனுக்கு எதிராக எகலபொல, ஒரு புறம் படையெடுப்பு முயற்சியையும் மறுபுறம் சிங்கள மக்களைத் திரட்டும் வேலையையும் செய்து வந்தான். அவற்றை அறிந்த கண்டி மன்னர், எகலப்பொலவின் சதிக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு மரண தண்டனை விதித்துக் கொலை செய்தார். இதனை அறிந்த எகலப்பொல தலைமறைவாகி விட, 1814 ஆண்டு மே மாதத்தில், கண்டி அரண்மனைக்கு எதிரே ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில், எகலப்பொலவின் மனைவி குமாரிஹாமியும், 11 வயதுக்குக்கும் குறைவான அவர்களது நான்கு சிறு குழந்தைகளும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இந்தச் செயல் ஏற்கனவே வெறுப்பில் இருந்த சிங்கள மக்களுக்கு, விக்கிரமராஜசிங்கன் மீது கடும்கோபத்தை உண்டாக்கியது. இந்தச்சூழலை எகலப்பொலவும் ஆங்கிலேய அதிகாரி இராபர்ட் ப்ரவுன் ரியும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, கண்டி அரசுமீது படையெடுக்க முயற்சி செய்தனர். இவ்வாறான சூழலில், சிங்கள மக்களிடையே ஒரு முக்கியப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். அதாவது, சிங்கள மக்களையும் பௌத்த மதத்தையும் அந்நிய மன்னனிடமிருந்து காப்பாற்றவே இந்த யுத்தம் நடைபெறப்போகிறது என்று அறிவித்து, ஸ்ரீ விக்கிரமராசசிங்கனை ஆங்கிலேயரிடம் காட்டிக்கொடுத்தபோது கண்டி 1815.03.02 திகதி ஆங்கிலேயர் கைவசமாகியதோடு, முழுநாடும் அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வருகின்றது.

**2.4.2.4.3 கண்டி நாயக்கரும் கண்டிச் சிங்களவரும்**

கண்ணுச்சாமிக்கும் எகலபொலவுக்கும் மோதல் அதிகரித்தது. எகலபொல ஆங்கிலேயர் உதவியுடன் மன்னனைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்தான். இதையறிந்த மன்னன் எகலபொல குடும்பத்தை சிறையடைத்தான். எகலபொல ஆங்கிலேயருடன் படை திரட்டிக்கொண்டு கண்டி நோக்கி முன்னேறினான். இதனை கேள்விபட்ட ஸ்ரீ விக்ரமராசசிங்கனுக்கு ஆத்திரம் தலைக்கேறியது. இதுதான் தக்க சமயம் என்று நேரம்பாத்து காத்திருந்த அமைச்சர் பிலிமத்தலாவை மற்றும் படைத்தளபதி மொல்லிகொட உள்ளிட்டோர் மன்னருக்கு மதுவை

ஊற்றிக் கொடுத்து அவரின் கோபத்தை மேலும் பன்மடங்காக்கினர். பிறகு எகலபொலயை பழிவாங்க ஒரு யோசனையையும் சொன்னார்கள். அந்த யோசனை தான் மன்னனின் அழிவுக்கு முக்கிய காரணமானது. பிலிமத்தலாவையின் யோசனையை ஏற்ற மன்னன் எகலபொலயின் பிள்ளைகள் நால்வரையும் பிடித்து வந்து அவர்களின் தலைகளை சிரச்சேதம் செய்து, அந்தத் தலைகளை ஒரு இரும்பு உரலில் போட்டு அந்தப் பிள்ளைகளின் தாயான குமாரிஹாமினியை கொண்டே இரும்பு உலக்கையால் இடிக்க வைத்தான். ‘‘ராஜதுரோகத்திற்கு இதுதான் தண்டனை’’ என்று அம்மன்னன் கூறினான். இந்த நிகழ்வு மக்கள் மத்தியிலே அதிர்ச்சியை உண்டுபண்ணியது. அதன் பின்னணியில் மக்கள் ஆங்கிலேயரை ஆதரித்தனர். கண்ணுச்சாமி வழக்கம்போல ஓடிப்போய் தலைமறைவானான். ஒரு குகையில் தன் மூன்று மனைவிகளுடன் மறைந்திருந்த அவனை ஆங்கிலேயர் கைப்பற்றி, அவன் உயிரைக் காப்பாற்றித் ‘‘தண்ணீர் வேண்டுமா?’’ எனக் கேட்டனர். ‘‘இல்லை மது வேண்டும்’’ என்றான். மது கொடுத்து பல்லக்கில் மரியாதையுடன் அழைத்துச் சென்று தமிழகத்தில் உள்ள வேலூர்ச் சிறையில் அடைத்தனர். எகலபொல தன்னை ஆங்கிலேயர் அரசனாக்குவரகள் என்று எதிர்பார்த்தான். ஆனால், அது நடக்கவில்லை. ஆங்கிலேயர் தமது நேரடி ஆட்சியைக் கண்டியில் ஏற்படுத்தினர். கொழும்பில் வெள்ளைக்காரரின் அன்பான உபசரிப்பில் கவலை மறந்திருந்த மன்னனை, 1816 ஜனவரி 26 ஆம் திகதி, கப்பல் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர். ராணிகள், தாயார், உறவினர்கள் என சுமார் 60 பேர் வரையில் கப்பல் ஏறினர். சென்னையிலிருந்து இவர்கள் வேலூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, வேலூர் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டனர். தனது 17 வருட ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரிட்டிஷார் ஆகிய மூன்று வல்லரசுகள் கண்டியை நெருங்கவிடாது, மக்கள் ஆதரவுடன் தடுத்தமை இம்மன்னனின் சாதனையாகும். கண்டி ஏரியையும் தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்தையும் இவனே கட்டினான். காதல், வீரம், கனிவு, அன்பு, தயைவு, கருணை, சோகம், இரக்கம், கொடூரம், அரக்கத்தனம் என அத்தனை உணர்வுகளையும் உள்ளடக்கிய மன்னன் ஸ்ரீ விக்கிரமசிங்கன். இவனுடைய ஆட்சியில், வாழ்க்கையில் நிகழ்ந்த நற்பண்புகள், நற்பணிகள் என்பவற்றை இக்கொடுமைகள் மறைத்துவிட்டன என்று கருதுவாரும் உளர்.

**2.4.2.4.4 மன்னனின் இறுதி உரை**

‘‘கண்டி மக்களுக்கு நான் எவ்வளவோ நன்மைகள் செய்தேன். அவர்கள் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அதற்காக அவர்களை குறைகூறமாட்டேன். என்ன செய்வது? நான் பெரிதும் நம்பியிருந்த மந்திரிகளும் சேனாதிபதிகளும் கூடஇருந்தே குழிபறித்து விட்டார்கள். நான் மன்னனானது முதல் மூத்த அதிகாரி பிலிமத்தலாவ, தனது பதவி ஆசையை நிறைவேற்றிக்கொள்ள என்னைப் பகடைக்காயாகப் பயன்படுத்தினான். அவன் துரோக எண்ணங்களை நீண்டகாலம் நான் புரிந்துகொள்ளவில்லை. அவனைப் புரிந்துகொண்டபின் நிதானமாக எச்சரித்தேன். அதனையும்மீறி அவன் செயற்பட்டபோது, அவனை விசார ணைக் குழுமுன் நிறுத்தி விசாரித்து மன்னிப்பு வழங்கினேன். எனக்கு விசுவாசமான சிலரைப் பற்றி பிலிமத்தலாவ என்னிடம் தவறாகக் கூறி அவர்கள் மீது எனக்குக் கோபம் வரச்செய்தான். கண்டி ஏரியை அமைத்து, தெருக்கள் வசதிகளைப் பெருக்கி, கண்டி நகரை அழகுபடுத்த நான் எத்தனித்தபோது, பிலிமத்தலாவ அதற்கு எதிராக பிரச்சாரம்செய்து, மக்களை தூண்டிவிட்டான். அவனுக்குப் பின்னர் உயர்பதவி கொடுத்து வைத்திருந்த எகலபொல என்பவனும் என் துரோகிகளுடன் சேர்ந்துவிட்டான். கடைசி நேரத்தில் மொல்லிகொட என்பவனும் சேர்ந்து நம்பிக்கைத் துரோகம் செய்தது, உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர்களிடம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்களிடம் நன்றி, விசுவாசத்தை எதிர்பார்க்க வேண்டாம். என்னிடம் இருந்த சில அதிகாரிகள் வெள்ளைக்காரர்களுடன் கொண்ட சகவாசத்தால் மதுவுக்கு அடிமையானார்கள். எனக்கும் மதுப்பழக்கத்தை பழக்கினார்கள். என்னை சிலர் அழிக்கமுயல்வது தெரிந்ததும், நித்திரை வராமல் மதுவை நாடி மதியிழந்திருந்து, இன்று நாட்டையும் இழந்தேன். எனக்கு உயிர் பிச்சை அழித்தமைக்கு நன்றிக்கடனாக, நான் உங்களை இப்படி எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதனால்தான் என் எண்ணங்களை கொட்டினேன். நன்றி! வணக்கம்! சென்று வருகின்றேன்’’ கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிர மராஜசிங்கன் பிரிட்டிஷ் அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டுப் பின்னர், தெல்தெனி யாவிலிருந்து

கொழும்புக்குப் புறப்படமுன், சுற்றி நின்ற ஆங்கில அதிகாரிகளான ஜோன் டி ஒய்லி, குக் ஆகியோர்களைப் பார்த்து மேற்கண்டாவாறு சொல்லியிருந்தான். (இந்தத் தகவல் 1903 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வெளிவந்த இலஸ்ரெட்டட் லண்டன் நியூஸ் என்ற பத்திரிகையில் "மன்னன் பிடிபட்ட கதை" என்ற கட்டுரையில் காணப்படுகின்றது - இணையம்)

**2.4.2.5 கண்டி மன்னர்களை அடையாளப்படுத்தும் மட்டக்களப்புத் தமிழக இலக்கியங்கள்**

கண்டி மன்னர்கள் மட்டக்களப்புத் தமிழகத்துடன் கொண்ட உறவு மானசீகமானது. சிலவருடங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டபோதும், கண்டி மன்னர்கள் மட்டக்களப்பு வன்னியர்களுடனும் போடிகளுடனும் அதிக தொடர்பினைக் கொண்டிருந்தனர். மட்டக்களப்புப் பிரதேசம்மீது, கண்டி மன்னர்களின் பார்வையும் பதிவும் அதிகமாகவே இருந்து வந்துள்ளன. ஈழத்தமிழர்கள் கண்டி அரசரைத் தங்களின் மன்னராகவும் இறைவனாகவும் மனதிலெண்ணி நாடகமாகவும், தெருக்கூத்தாகவும் நடத்தி வருகின்றனர். 1887 இல் திரிகோணமலையில் வாழ்ந்த வே.அகிலேசம்பிள்ளை எழுதிய கண்டிராசன் கதை, 1910 இல் எம்.என்.பாவா எழுதிய கடைசிக் கண்டி மன்னன் வாழ்க்கையில் நடந்த சம்பவம், 1928 இல், சிவ.சண்முகம்பிள்ளை எழுதிய கண்டி ராஜா நாடகம், 1934 இல் பி.கே.எம் ஹசன் எழுதிய கண்ணுச்சாமி அல்லது ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் எனப் பல்வேறு நூல்கள் விக்கிரம இராஜசிங்கனைப் புகழும் நூல்களாகும். இங்குள்ள பல கிராமங்களில், திருவிழாக்களில் கண்டிராசன் கதை என்ற பெயரில் நாடகங்களும் கூத்துக்களும் ஏராளமாக நடந்துள்ளன. மேலும்,கண்டி மன்னர்களை வாழ்த்திப்பாடும் பாடல்கள் பல மட்டக்களப்புத் தமிழகத்தில் எழுந்த காவியப் பாடல்களில் பதிவாகின்றன. ஒரு நாட்டு மன்னன் பத்தி இலக்கியங்களில் துதிக்கப்படுகின்றான் என்றால், அம்மன்னர் பரம்பரையினால் அச்சமூகத்திற்கு எற்பட்ட நன்மைகள் புலனாகின்றதல்லவா? இப்பாடல்கள் இன்றும் இங்கு இடம்பெறும் கிராமியத் தெய்வச் சடங்கு இடம்பெறும் காலங்களில் பாடப்படுகின்றன. இப்பனுவல்களில் வரும் இராசசிங்கன் யார் என்பது சுட்டிப்பாடப்படவில்லை. பொதுவாகவே இராசசிங்கன் என்றே வருகின்றது. முதலாம் இராஜசிங்கன், இரண்டாம் இராஜசிங்கன், ஸ்ரீ விஜயராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன், இராஜாதி ராஜசிங்கன், ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் ஆகிய பெயர்கள் இராசசிங்கன் என்ற பின் அடைகளைக் கொண்டே வருகின்றன. இவ்வாறான நிலையில் வாழ்த்துப்பாடல்களும் அமைந்துள்ளன. ஆனால், நாயக்கர் மன்னர் பரம்பரையில் வந்த கண்டி மன்னர்கள் மட்டக்களப்பு மக்களுடனும் இங்குள்ள தலைமை நிலைமைகளுடனும் சிறந்த தொடர்பினைப் பேணியுள்ளமையினை வரலாறு தெளிவுபடுத்துவதனாலும், இராசசிங்கன் என்ற இறுதி அடையினைக் கொண்டு பானுவல்களை நிறைவு செய்துள்ளமையியாலும் நாயக்கர் மன்னர்களை அதிகம் உள்வாங்கிப் பாடப்பட்டுள்ளமையினை காணமுடிகின்றது.

**2.4.2.4.1 கண்டிராஜன் ஒப்பாரி**

கண்ராஜன் ஒப்பாரி எனும் இலக்கியம் ஒரு பெண்ணை வருத்துவதால், அந்த நாடே அழியும் என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டிருக்கின்றது. தமிழ் இலக்கியப் பரப்பில் சீதை, கண்ணகி, துரோபதை போன்றவர்கள் வருத்தப் பட்டதாலும், வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாலும் அந்த நாடே அழிந்தமையினை வரலாற்றுக் கதைகள் வழியே அறிகின்றோம். ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் தோல்விக்கும் கண்டி நகர் ஆங்கிலேயரால் கைப்பறிறப்பட்டமைக்கும் பூசணியாள் என்கின்ற பெண்ணின்மீது ஸ்ரீ விக்கிரம ராசசிங்கனின் கொண்ட காமுகப்பசிதான் காரணம் என்பதனை இந்தப் புலவர் பதிவுசெய்கின்றர். எனினும், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இடைச்செருகல் இடம்பெற்று கதை கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. ஒருவகையில் ஸ்ரீ விக்கிரமராசசிங்க மன்னன்மீது உள்ள தவறினைச் சுட்டிக்காட்டுவதற்கும் கண்டிநகர் காட்டிக் கொடுக்கப்பட்டமை நியாயமானது என்பதனை நிருபிக்கும் போக்கும் இப்படைப்பு அடையாளமாகின்றது. (தயாநிதி,முருகு:2018)

**2.4.2.4.2 கண்டி**

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வர் ஆலயத்தில், கஞ்சிமுட்டி கூறும் நிகழ்வு இடம்பெறுகின்றமை வழக்கமாகும். (தற்காலத்தில் இல்லை) இந்த முட்டியினைப் பெறுபவர்கள் தங்கள் குல கோத்திரங்களை நிருபிக்க வேண்டும். இதில் கண்டி எனும் பகுதியில் வருகின்ற பாடலை அவதானிக்கமுடியும்.

**2.4.2.4.2.1 சபையில் உள்ளவர் முட்டி வாங்க வந்தவரிடம் வினவுதல்**

"ஈழமுறும் கண்டியதன் பெருமைகூற வெழுந்து வந்தீர்

நில்லு நில்லுன் ஊரும் பேரும்…"

(கமலநாதன், சா.இ.,2005)

**2.4.2.4.2.2 முட்டி வாங்க வந்தவர் தனது வரலாறு கூறுகின்றார்**

"தெரியாதா ரிச்சபைக் கருகரார்
சிறிமதியின் வயிற்றுதித்த சிங்கவாகு
பரிவாக வீன்றெடுத்த விஜயராசன்…"

(நடராசா, எவ்.எச்.சி.,2008)

**2.4.2.4.3 போடி கல்வெட்டு**

"திங்கள் நேருலாவும் செகதல மனைத்தும்
மங்குறாதழகொடு மண்முனைக்கதிபன்
சிங்கவாகுவின் செல்மதி கொண்டு
பங்கிடா வெளியெனும் பதிதனில் இருந்து
கலிங்கர் குலத்துக் கன்னனென்றொருவன்
துலங்கி வாழ் நாளில் துதிபெறுங் குகன்முறை
குன்றாதரசு குடிபடையோடு
கண்டிமா நகருக்குக் கதியெழு நடத்தி
ஆண்டர்கள் வாழ்ந்த அரசேற்றிருந்து
குகன் குல வரிசை குவலயம் வழங்க
……………………………………….."

(கமலநாதன்,சா.இ.,2005)

கண்டி ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு இருந்தமை தெளிவுபடுத்தப்படுகின்றது.

**2.4.2.4.4 மாரியம்மன் காவியம்**

"ஈசனுடன் நாலுமறை வேதனுதல் வாழி
இந்துமதியொத்தளக ஈசுபரிவாழி
வீசுபுகழ் உறுராச சிங்கனும் வாழி…"

(கணபதிப்பிள்ளை,சி.,1970)

**2.4.2.4.5 வீரபத்திரர் காவியம்**

"சீர்புனையு மூவருடன் மாலும்நான் முகனுஞ்
சிவவேத கதிரைவடி வேல்முருகர் வாழி
பார்கொண்ட முனிவோர்கள் ஆதி அந்தணரும்
பரிவான ராசசிங்க மன்னனும் வாழி…"

(கணபதிப்பிள்ளை,சி.,1970)

இப்பனுவல்களில் ராசசிங்கனும் வாழி, ராசசிங்க மன்னனும் வாழி என்ற நிலையில் அவர்களுடைய பணிகள் மேலோங்குகின்றன.

**2.4.2.4.6 சிங்காரபுர மாரியம்மன் காவியம்**

"வாழிமதி தெறுமுகில்கள் குறைவின்றி மழைபெய்து
வளர் செந்நெல் மிகவாகி மலிவடைய வாழி
வாழிபிர திட்டையா கமம்விழா வாழி
மகிழையுள நீறுகண்டிகைசைவம் வாழி…"

(கணபதிப்பிள்ளை,சி.,1970)

இப்பனுவலில் கண்டிகை சைவம் வாழி என்பதனால், கண்டியில் ஆட்சி நிலவிய காலத்தில் சைவசமயமும் சைவ பக்தியும் மேலோங்கி இருந்தமை புலனாகின்றது.

**2.4.2.4.7 திரௌபதி அம்மன் காவியம்**

"நீதிசெறி மட்டக்களப்பு நகர் வாழி
நேசமாய் மாதமும் மாரிமழை வாழி
வேதவிதியாகம புராணமிக வாழி
மேதினியில் உள்ளவர்கள் யாவரும் வாழி
தீதகலவே அரசர் செங்கோலும் வாழி…"

(கணபதிப்பிள்ளை,சி.,1970)

**2.4.2.4.8 காளியம்மன் காவியம்**

"ஏர்வாழி மறைவாழி யாயர்கள் வாழி
ஈரேழு புவனமும் வாழ் மிக வாழி
பார்வாழி மன்னர் செங்கோல் நிதம் வாழி
பஞ்சாட்சரத்துடன் பாவையர்கள் வாழி…"

(தயாநிதி,முருகு.,2025)

திரௌபதி அம்மன் காவியம், காளியம்மன் காவியங்களில் மட்டக்களப்பினை மேலாண்மை செய்த தலைமை நிலைமைகளும் மக்களும் வாழ்த்தப்படுவதோடு, கண்டி நகரினை ஆளும் அரசர்களுடைய அறம் சார்ந்த அரசியலும் வாழ்த்தப்படுகின்றது. செங்கோல் என்றும் நிலைக்க வேண்டும் என்று இன்றும் துதிக்கப்படுகின்றது.

**2.4.2.4.9 கல்லாற்று மாரியம்மன் காவியம்**

"வாழ்வுபெறு பண்டார வன்னியர்கள் வாழி
வரிசைபெறு நரசிங்கராசனும் வாழி
ஊழ்வினையகற்றி வரு இடர்பிணிகள் நீக்கி
உயிர்காக்கும் மாரிபதம் வாழ வாழியவே…"

(தயாநிதி,முருகு.,2025)

பண்டார வன்னியர்களின் ஆட்சியும் வீரநரேந்திர சிங்கன் துதிக்கப்படுகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது.

**2.4.2.4.10 கடல்நாச்சியம்மன் காவியம்**

"சீர்வாழி புவிவாழி வேதமுறை வாழி
திருநீறுவாழி சிவ சமயநெறி வாழி
பார்வாழி கண்டிமகா ராசாதிராசன்…"

(கணபதிப்பிள்ளை,சி.,1970)

கண்டி மகாராசாதி ராசன் என்பது கண்டி மன்னர்களைச் பொதுவாகச் சுட்டி வந்தாலும், அது கண்டி நாயக்க மன்னர்களைச் சுட்டி வருகின்றன போலும்.

**2.4.2.4.11 கடல்நாச்சிமார் பள்ளு**

"அன்னமே நான்முகன் வாழி – எங்கள்
ஆறுமுக வேலவன் அடியினைவாழி
மன்னர் செங்கோல் நிதம் வாழி – எங்கள்…"
(தயாநிதி,முருகு.,2025)

செங்கோல் வாழி என்பதால் கண்டி மன்னர்களுடைய ஆட்சியின் தன்மையினையும் மட்டக்களப்பு நகர் வாழி என்பதனால் இங்கு ஆண்ட தலைமை நிலைமைகளையும் விளக்கிநிற்கின்றன.

**2.4.2.4.12 வெருகல் சித்திவேலாயுதர் காதல்**

இது வீரக்கோன் முதலியாரால் பாடப்பட்டது. இது கி.பி.1686க்குச் சிறிது முன் பின்னான காலப்பகுதி என்பர். நாலு சீர்களாலான இரண்டு அடிகளைக் கொண்ட 421 கண்ணிகளை உடையது. கண்டியை ஆண்ட இராசசிங்கன் மன்னன் இதனுள் பேசப்படுகின்றமையால், நூலாசிரியர் வாழ்ந்த காலம் 1686 ஆண்டை ஒட்டியதே என்பர்.

"மானமு டன்மிக்க வயனிலமுந் தோப்புகளும்
மானிய மாயீந்த மகராச ராசேந்திரன்
மாணிக்கம் வைத்திழைத்த வன்னப்ப தக்கமுடன்
பூணணிக ளீந்து புகழ்படைத்த பூபாலன்
கண்டிநக ராளுங் கனகமுடி ராசசிங்கன்
தெண்டனிடும் போதெனது சேதியைநீ சொல்லாதை"
(இரகுபரன்,க.,2005)

இங்கு வாலமுத்து மோகனப்பெண் கிள்ளையைத் தூதுவிடுட்டு, தனது காதல் உணர்வினைக் கீழ்வருபவர்களிடம் சொல்லாதே என்கின்றாள். பின்னர் சித்திரவேலாயுதர் வெருகல் கங்கையில் நீராடி, நறுமணத் திரவியங்களைப் பூசி, மாணிக்கப்பீடத்தில் இருக்கும்போது வாலமுத்து மோகனப்பெண் அனுப்பிய தூதென பணிந்து பக்குவமாய் சொல்லிவிட்டுக் கடம்பமாலையினை வாங்கி விரைவாக வரவேண்டும் என்று, கண்டி மன்னன் மற்றும் வன்னிமை மரபுகளைச் அடையாளப்படுத்துகின்றார்.

**2.4.2.4.13 பறாளை விநாயகர் பள்ளு**

"கயல்வ ரைந்த துவசன் பணிநவ
கண்டி மன்னன் வரராச சிங்க
னியல்பு டன்றிருச் செங்கோ னடாத்திய
வீழ மண்டல நாடெங்க ணாடே…"

சின்னத்தம்பிப் புலவர் காலத்தில் தமிழறிந்தவர்களாய்ச் சுயாதிபத்தியத்துடன் ஆட்சி செலுத்தியவர்கள் கண்டியரசர்கள் மாத்திரமே. ஆனால், இப்பாடலில் போற்றப்படும் கண்டியரசன் சின்னத்தம்பிப் புலவனின் சமகாலத்தவனல்லன். 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவனான இராசசிங்கனே இங்கு போற்றப்பெறுகின்றான். அவனது படைகள் இருதடவை யாழ்ப்பாணத்துமீது படையெடுத்துச் சென்றதாக அறியவருகின்றது. சைவத்துக்குப் பேரிடர் புரிந்த ஐரோப்பியர் காலத்தில் வாழ்ந்த யாழ்ப்பாணப் பிரபுக்கள் சைவாபிமாணியாய் விளங்கிய இராசசிங்கன்மேல் அபிமானம் கொள்ளுதல் இயல்பே. சின்னத்தம்பிப்புலவர் காலம் வரை, அவன் மேலான அபிமானம் யாழ்ப்பாணப் பிரபுக்களிடையே நீடித்திருந்தது போலும். அந்த அபிமானத்தின் மிகுதிப்பாடே இராசசிங்களைன மேற்படி பாடலில் பாண்டியனும் பணியும் பிரதாபமுடையவன் என்று புகழச் செய்ததாகலாம். (இரகுபரன்,க.,2005)

**2.4.2.4.14 நரேந்திர சிங்கராசன் வசந்தன் சிந்து**

"சீராருந் தென்னிலங்கை யாளவந்த வேணரேந்திர
சிங்கசாமிமேல் வசந்தன் சிந்து சொல்லவே.
காராருஞ் சோனைமழைக்கால் விழுந்தாற்போல் வழிந்த
கன்னமதத் தண்ணல் பதங் காப்பதாமே.
காப்பழகுந் தாதகித்திண் பூப்பழகு மாலை மார்பன்
கண்டிவாணரேந்திரன் சிங்கக்காவலன் மீதே…"
(அகிலேசபிள்ளை, வே.,2007)

**2.4.2.4.15 இராசசிங்கன் பள்ளு**

"திருமேவும் புயசயிலச் செல்வனெனவரும் ராசசிங்கன்
அருமேவும் அரசோங்க ஆதிபரனே யுதவி செவ்வாய்
ஆதியருள் பெற்றி ராசசிங்கன் அம்புவியோர்கள் மிகவாழ
வேதியர்சூழ் தென்கதிரை வேலவர் நித்தந்
துணையாமே…" (தயாநிதி,முருகு.,2022)

**3.0 முடிவுரை**

இந்தியாவில் இருந்து காலத்திற்குக் காலம் இடம்பெற்ற படையெடுப்புகள் மற்றும் புலம்பெயர்வினால் உருவான மன்னர்கள் முதலானவர்களுடைய வருகையும்; மட்டக்களப்பு மக்களுடன் அவர்கள் கொண்ட உறவும்; நாயக்க வம்சத்தில் இருந்து பெண்களைத் திருமணம் செய்து கொண்டமையும்; சிங்கள மன்னர்களிடையேயும் மக்களிடையேயும் இருந்த நேரியல் மனப்பாங்கும்; நாயக்க மன்னர்களுடைய ஆட்சி, கண்டியைத் தலைநகராக் கொண்டு இடம்பெறுவதற்கு வழிவகுத்தது.

இராசசிங்கன், விமலதர்மசூரியன், நரேந்திரசிங்கன் முதலிய மன்னர்கள் மட்டக்களப்பு மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்துள்ளனர். குறிப்பாக முதலாம் விமலதர்மசூரியன் ஆற்றிய பணிகள் பற்றித் தாதன் கல்வெட்டு, குடுக்கை கூறும் கல்வெட்டு முதலிய கல்வெட்டுக்கள் தெளிவுபடுத்துகின்றன. அதாவது, மட்டக்களப்புத் தமிழக மக்களுக்கும் கேரள மக்களுக்கும் இடையிலான தொடர்பினால் எழும் சேரர்களின் குடியேற்றம், அதன்வழி மேற்கிளம்பும் மருமக்கள் தாயம், பண்டாரங்களின் ஆலயப்பணி, தென்னங் கள் பயன்பாடு, மாந்திரிகம், போடிமுறை, உணவு, உடை, வாழ்விடம், பேசும் சொற்கள் என்ற நிலையில் அதன் தன்மை நீள்கின்றது. அதாவது, கேரளத்தினை மையமாகக்கொண்ட தெலுங்கு இனப்பரம்பல், கண்டி நகரை அரசியல் அடிப்படையில் அலங்கரித்து நின்றது. பண்டைக் காலமுதல், மட்டக்களப்புக்கும் கேரளத்திற்கும் உள்ள தொடர்பினை, கண்டி இராச்சியம் மேலும் வலுப்படுத்தியது என்பதனைத் தெளிவாக உணரமுடிகின்றது. பொதுவாக மட்டக்களப்புத் தமிழகமானது, கண்டி மன்னர்களுக்கு பிரதான தளமாக அமைந்திருந்தமையினை, எகலப்பொலவினுடைய பின்னணியின் வாயிலாக அறிந்துகொள்ளமுடிகின்றது. அதாவது, கண்டி மன்னர்கள் காலாகாலமாக மட்டக்களப்புத் தலைமை நிலைமைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பது, அறுமக்குட்டிப்போடி மற்றும் அவருடைய தம்பி கந்தப்போடி ஆகியோரை முறையே, மட்டக்களப்பின் வடபாகத்திற்கும் தென்பாகத்திற்கும் தலைமைநிலைமைகளாக நியமித்ததன் பின்னணியினால் மேலெழுகின்றது. இவ்வாறான நியமனத்தினால் ஒல்லாந்தருக்கும் கண்டிக்கும் இடையிலான தொடர்பு வெளிப்படுவதோடு, கண்டிக்குப் பாதுகாப்பு வழங்கும் ஒரு அரனாக மட்டக்களப்புத் தமிழகம் இருந்தமையும் தெளிவாகின்றது. அதனால் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் வெற்றிகொள்ளமுடியாத நகரமாகக் கண்டி காணப்பட்டது. கண்டி இராச்சிய காலத்தில், இலங்கையின் தேசிய மொழியாகத் தமிழ் இருந்துள்ளமையினைக் கண்டி மன்னர்களில் பலர், தமிழினால் கையொப்பம் இட்டிருந்தமையின் வாயிலாகப் உணரமுடிகின்றது. இவ்வாறாகக் கண்டி மன்னர்களின் மேலாண்மை நிலவியபோதும், நாயக்க மன்னர்கள், தமிழ் மன்னன் என்றமையினால், அவர்களுடன் இருந்த சிங்களப் பிரதானிகள் மேற்கொண்ட சதிகளினாலும் காட்டிக்கொடுப்பினாலும் நாயக்கர் வம்சத்தினரின் ஆட்சி, 1815ஆம் ஆண்டு ஆங்கிலேயரினால் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றது. எனினும், நாயக்க மன்னர்களின் மேலாண்மை, மட்டக்களப்புத் தமிழகத்தில் எழுந்த பல இலக்கியங்கள், கல்வெட்டுக்களில் அடையாளப்படுத்தப்படுவதோடு, அவர்கள் இறைவனுக்கு சமமாகவைத்து போற்றியும் வாழ்த்தியும் துதிக்கப்படுகின்றனர். எனவே, பண்பாட்டுத் தளத்தில் இவ் ஆய்வுக்கட்டுரையானது, பல்வேறு செய்திகளை எமக்கு வெளிப்படுத்துகின்றது. அதாவது, நாயக்க மன்னர்களுடைய ஆட்சியினை இந்தியச் சூழலுடன் ஒப்பிட்டு ஆராயவேண்டிய தேவையினையும்; மட்டக்களப்புக்கும் கண்டி மன்னர்களுக்கும் இடையிலான தொடர்பினையும்; கண்டி மன்னர்கள் மட்டக்களப்புத் தமிழகத்தில் எழுந்த காவியப் பாடல்கள் பலவற்றாலும், ஏனைய பிரதேசங்களில் எழுந்த ஒரு சில பாடல்களினாலும் துதிக்கப்படுதலின் பின்னணியினையும் கண்டு கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது. அவ்வாறான முயற்சி மேற்கொள்ளப்படும்போது, மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றினை மேலும் வலுப்படுத்த வாய்ப்பு ஏற்படுவதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான பொருண்மையுடன் இணைந்த வகையில் ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்குத் திறவுகோலாக அமைந்து, பல்வேறு தேடல்களுக்கு இடம்கொடுக்கும் என்பதனையும் கண்டுகொள்ளமுடிகின்றது.

## References


1. அகிலேசபிள்ளை, வே., (2007). திருகோணமலைப்புலவர் வே.அகிலேசபிள்ளை நூற்றிரட்டு. ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயம். ஹம் ஜேர்மணி.

2. இரகுபரன்,க., (பதிப்பாசிரியர்), (2005). நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள். இந்து சமய கலாசாரத் திணைக்களம். கொழும்பு.

3. கணபதிப்பிள்ளை.க., (1970). மகாமாரிதேவி திவ்விய கரணி. மட்டக்களப்பு.

4. கந்தையா.வி.சி., (1964). மட்டக்களப்புத் தமிழகம். ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம். இலங்கை.

5. கமலநாதன்.சா.இ., (2005). மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்.குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை.

6. கிருஷ்ணராசா.செ., (2012). இலங்கை வரலாறு. பிறைநிலா வெளியீடு.

7. சாரல்நாடன்., (2005). கண்டிராசன் கதை. சாரல் பதிப்பகம். கொட்டகலை.

8. சிவசண்முகம்பிள்ளை,ஏகை., (1906). கண்டிராஜா நாடகம். திரிபுரசுந்தரிவிலாசம்.

9. சிவசண்முகம்.பு., (2000). மட்டக்களப்பு குகன்குல வரலாறும் மரபுகளும். விபுலம் வெளியீடு.

10. சிவசுப்பிரமணியம். வ., (2004). மட்டக்களப்பு நாட்டாரியல். நல்லையா வீதி. மட்டக்களப்பு.

11. நடராசா.எவ்.எச்,சி., (1998). மட்டக்களப்பு மான்மியம். மட்டக்களப்பு கலாசாரப்பேரவை.

12. தயாநிதி. முருகு., (2025). அமிர்தபரிபூரணி முதலிய காவியங்கள். (கிராமியத் தெய்வக்கோயில்கள் மீது பாடப்பட்டவை) கெவின் கார்கி பதிப்பகம். சென்னை.

13. தயாநிதி. முருகு., (2018). கண்டிராசன் ஒப்பாரி. கலைப்பூக்கள் கலைக்கழகம். அம்பிலாந்துறை.

14. தயாநிதி. முருகு., (2022). வசந்தன்கூத்து. தமிழ்ப்புதுவை. புதுச்சேரி.

15. மிக்கோர்சிங்கம்,நீ., (1978). கண்டியரசன் (நாட்டுக்கூத்து). நாட்டுக்கூத்து ஒன்றியம். பாசையூர். யாழ்ப்பாணம்.

16. இணையத்தில் இருந்து பெறப்பட்டதகவல்கள்.